**சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான "சிறப்பாகத் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் நிதியத்தின் மீதி ரூபா 1,214,115,436 ஆக இருந்ததுடன் நிதிய புத்தகங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,202,851,043 ஆனமையால் ரூபா 11,264,393 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வேறுபாட்டிற்கான காரணத்தை காண்பித்து இணங்கக் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 144,744,167 ஆன Pool Payment payable மற்றும் ரூபா 37,418,587 ஆன Reward Refund Payable என்பன உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் உரிமையாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய கணக்கு விடயம் சரியான பிரகாரம் இனங்காணப்படாமல் அறிக்கையிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்று காசு அடிப்படையில் அன்றி அபிவிருத்தி செய்யப்பட்ட காசு அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. அது குறிப்பு இலக்கம் 2.1 இல் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்கு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு எனினும் உரிய நிதியாண்டில் கொடுப்பனவு செய்ய முடியாத கொடுப்பனவுகள் மற்றும் உப நிதியம் (Pool) இன் கீழ் ஒதுக்கப்பட்டு எனினும் அந்த ஆண்டில் செலுத்தப்படாமல் சேமிக்கப்பட்டுள்ள தொகையும் இதற்கு சில வருடங்களிலிருந்து கொடுப்பனவுகள் மீள பெறல் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 37,418,587 தொகையும் (ஓய்வு பெற்ற அல்லது மரணமடைந்த உத்தியோகத்தர்களின்) அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமைக்கு இணங்க கணக்குகளை வைத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவு | வெகுமதி நிதியத்தில் வெகுமதி பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதியமைச்சரின் இணக்கப்பாட்டைப் பெற்று அதற்காக பொருத்தமான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். எனினும் 1988 சனவரி 28 ஆந் திகதிய பீஎல் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக | திணைக்கள சுற்றறிக்கை விநியோகிக்கும் போது சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டியமையால் இந்த DOPL 118 விநியோகிப்பதற்கு முன்னரும் நிதியமைச்சரின் | நிதியத்தை பகிர்ந்தளிக்கும் பொருத்தமான திட்ட முறைமை யொன்றை தயாரித்தல் வேண்டும். |

நிதியமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமல் 1999 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 23 வருட காலத்தில் வெகுமதி நிதியமாக உத்தியோகத்தர்களுக்காக ரூபா 18,624,256,063 தொகையும், ஒற்றர்களுக்காக ரூபா 2,422,648,345 தொகையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

இணக்கப்பாடு பெறப்பட்டமை நினைவூட்டுகின்றோம். எனினும் அதன் பிரதியொன்றை கண்டறிவதற்காக இதுவரை முடியாதிருந்தது. எனினும், ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் இந்த நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீடொன்று நிதியமைச்சருக்கு சமர்ப்பித்து அவரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெறப்படுகின்றமையால் இந்த நிதியத்தில் செலவினங்களைச் செய்வதற்காக அங்கீகாரம் பெறப்பட்டதாக கருத முடியும். எனினும் திணைக்கள சுற்றறிக்கை 118 ஐ திருத்துதல் தொடர்பான முன்மொழிவு மற்றும் பரிந்துரை சமர்ப்பிப்பதற்காக தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பரிந்துரையின் பிரகாரம் அந்த திணைக்கள கட்டளைகளை திருத்துவதற்கும் அதன் பிரகாரம் தேவையான படி அமைச்சின் செயலாளர் மற்றும் கௌரவ நிதியமைச்சரின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம்.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிலுவை தண்டப்பண வருமானம் சேகரித்தல் | | |
| திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற மும்மாத நிலுவை தண்டனைப் பண வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 7,052,812,693 நிலுவையாக தண்டப்பண வருமானம் காணப்பட்டதுடன் இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அதில் ரூபா 5,921,928,174 தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் நிலுவையாக காணப்பட்டதுடன் 05 வருடங்களை விஞ்சிய நிலுவைத் தண்டப்பண வருமானம் ரூபா 1,098,976,593 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிலுவை தண்டப் பணம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் செலுத்த வேண்டிய உற்பத்தி வரி குறித்துரைத்த திகதியில் செலுத்தாமல் தாமதமடைந்ததன் காரணத்தால் அந்த நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு இருந்த தண்டப் பணமாகும். எனினும் அவ்வாறு செலுத்தாமைக்கான காரணமாக மேலும் அரசாங்க நிறுவனமான முப்படைகள், பொலிஸ் மற்றும் புகையிரத திணைக்களம் போன்ற அத்தியவசிய சேவைகளை வழங்குகின்ற அரச நிறுவனங்களுக்கு கடனுக்கு எரிபொருள் வழங்கி அவற்றை தீர்க்காமையின் காரணமாக இருந்ததாக முறைப்பாடொன்றின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதியமைச்சருக்கும் அது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | அரச வருமானத்தை பாதுகாத்தல் தொடர்பாக கவனம் செலுத்தி நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் வெகுமதியாக செலுத்துதல் சுங்கத் தவறுகள் தொடர்பாக ஏற்படுகின்ற சுங்க புலனாய்வுகளின் போது அந்த தவறுகளுக்குரிய இறக்குமதியில் வழமையான முறையில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியாயின் அதன் அடிப்படையில் | அந்த தவறுகளை வெளிப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் சூட்சுமமாக நடவடிக்கை எடுத்ததனாலேயே சுங்கத் தவறுகளை தண்டனையாக விதிப்பதற்கு முடியுமாக இருந்தது. அவ்வாறு சூட்சுமமாக இந்த தவறுகள் வெளிப்படுத்தப்படாதிருக்கு மாயின் அந்த சம்பவத்திற்குரிய மொத்த வருமான அளவும் சிலவேளை அரசாங்கத்திற்கு | அரசாங்க வருமானத்தை பாதுகாக்கும் வகையில் சுங்க புலனாய்வு களுக்காக வெகுமதிகளை செலுத்தும் வேலைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட ஆகக்குறைந்த வரி வருமானத்தின் அளவு அறவிடப்பட்டு அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த உரித்தற்று போன வரி வருமானமும் தண்டப்பணமாக கருதி அவ்வாறு விதிக்கப்பட்ட தண்டனைப் பணத்தில் 50 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் வெகுமதியாக செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அரசாங்க வருமானத்தில் மேற்கொள்ளப்பட்ட பாதகமான தாக்கங்கள் தொடர்பாக பல ஆண்டுகள் முதல் கணக்காய்வினான்ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனினும் அது தொடர்பாக எந்தவொரு கண்டறிதலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்த நிலைமையை கவனத்தில் கொள்ளாமல் விட்டமையால் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற வெகுமதி பணங்களின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றமை அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக மேலதிக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. | இழக்கப்படுகின்ற தொகையாக இருக்கும். எனினும் உத்தியோகத்தர்களின் திறமையின் அடிப்படையில் சுங்கத் தவறுகளை கண்டுபிடிப்பதற்கு முடியுமாக இருந்தமையால் சேகரிக்கப்பட்ட பணத்தில் 30 சதவீத அளவு அரசாங்கத்திற்கு கிடைக்கின்றமையால் அரசாங்கத்தின் வருமானத்தில் ஏதேவொரு அளவில் பங்களிப்பு கிடைப்பதுடன் உத்தியோகத்தர்கள் சுங்கத் தவறுகளை பிடிப்பதற்காக ஏற்படுகின்ற முயற்சிகளும் உயர்மட்டத்தில் பேணிச் செல்ல முடியமாக உள்ளது. கொள்கை திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் மேலதிக பதிலைப் பெற்றுக்கொள்ளல் பொருத்தமானதாகும். | |
| (i) | நாட்டில் காணப்பட்ட சுதந்திர பொருளாதார கொள்கையின் அடிப்படையில் இறக்குமதியாளர் களுக்கும், ஏற்றுமதி யாளர்களுக்கும் | இது தொடர்பாக மேலதிகமாக கலந்துரையாடப்படுகின்ற மையால் பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்டிருந்த சிக்கலான நிலைமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் சுங்க கட்டளைச் சட்டத்தைப் போன்று இந்த நிதியத்தின் சட்டரீதியான ஏற்பாட்டை முறையாகவும் நாளதுவரையாகவும் திருத்துவதற்கான தேவை காணப்பட்டது. | | |
| (ii) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் சுங்க நியதிகளை மீறுதல் தொடர்பாக ஏற்படுபவைகள் தொடர்பில் சுங்க பணிப்பாளருக்கு பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் அரச வருமானத்தை பாதுகாத்தல் தொடர்பாக இலங்கை சுங்கத்தால் காண்பிக்கப்படுகின்ற கவனம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 வருடாந்த செயலாற்றல்

1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவின் பிரகாரம் பல்வேறு சுங்கத்தவறுகளுக்காக விதிக்கப்பட்ட தண்டனைப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையால் கிடைக்கின்ற பணத்தில் 50 சதவீதத்திற்கு சமனான பண அளவு சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தில் செலவு வைக்கப்படுவதுடன் சுங்க வரி மோசடிகளை வெளிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் போன்ற நோக்கங்களில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கும், ஒற்றர்களுக்கும் வெகுமதிகளை வழங்குவதற்காக இந்த நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 09 வருட காலத்தில் இந்த நிதியத்திலிருந்து உத்தியோகத்தர்கள், ஒற்றர்கள் மற்றும் பல்வேறு சேவை வழங்குகின்ற பிரிவுகளுக்கான உப நிதியத்திற்காக பணம் ஒதுக்கப்படுகின்றது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 14,778,000,068 தொகை உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த துடன் அதில் ரூபா 12,910,816,963 தொகை அதாவது 87.36 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட வெகுமதி நிதி 118.4 சதவீத அதிகரிப்பை காண்பித்தது. | புலனாய்வு கோவைகள் முடிவடைந்த வெகுமதி கோவைகளுக்கு செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இந்த சுங்க உத்தியோகத்தர்களின் பொது வைப்பில் வெகுமதி நிதியத்திற்குரிய பணம் செலவு வைக்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது வெகுமதி கோவைகளில் கணிசமான அளவிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் வெகுமதி நிதியத்தில் அதிகரிப்பு காண்பிக்கப்படுகின்றது. மேலும் 2021 ஆம் ஆண்டில் 2018, 2019, 2020 ஆம் ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட புலனாய்வுகளுக்கான வெகுமதி கோவைகளுக்காக அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையும், கொவிட் தொற்றுநோயின் காரணமாக இறக்குமதிகள் வரையறுக்கப்பட்டமையும் இதற்காக தாக்கமளித்திருக்கவில்லை. | நிதியத்தின் பயன்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வெகுமதி நிதியத்தின் உப நிதியமாக எரிபொருள் நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 62,611,784 செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கமாக சுங்க புலனாய்வுகளுக்காக தேவையான எரிபொருள் செலவினத்தை தீர்ப்பதற்காக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட எரிபொருள் கிரயம் திணைக்களத்தின் பொது செலவின தலைப்பில் செலவின பொறுப்பாக வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றோம். எனினும் இந்த எரிபொருள் நிதியத்தை தாபித்ததன் அடிப்படை நோக்கமாக சுங்க புலனாய்வுகளுக்காக ஏதாவது மிகையான எரிபொருள் தேவை ஏற்படுமாயின் அதற்காக ஈடுபடுத்துவதற்கு தாபிக்கப்பட்டிருந்ததுடன் LTTE போர் நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் சுங்கத் திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்ட சுங்க நிவாரண நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட கடற்படை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அந்த நிதியத்திலிருந்து எந்த செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் நியாயமான தேவையினை கவனத்தில் கொள்ளாமல் தொடர்ச்சியாக இந்த நிதியத்திற்கு பணம் சேகரித்து வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 651,419,513 ஆக காணப்பட்டதுடன் நிதியத்தில் எந்தவொரு செலவின பொறுப்புமின்றி பொது செலவின தலைப்பிற்குரிய நிதியேற்பாடுகளில் அந்த செலவினம் செய்யப்பட்டு சேமிக்கப்பட்ட இந்த பணம் நிதியத்தின் மிகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பிரிவின் (Marine Unit) எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்காகும். காணப்பட்ட யுத்தரீதியான பிரச்சினைகளில் இந்த பிரிவு செயலிழந்தமையால் இந்த நிதியத்தின் மீதி திரண்டிருந்தது. மேலும் Covid தொற்றுநோய் காலத்தில் புலனாய்வுகளுக்காக செல்லுதல் குறைவடைந்தமையின் அடிப்படையில் எரிபொருளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் சேமிப்பு காணப்பட்டமையால் இந்த நிதியம் ஈடுபடுத்தப்படவில்லை. | |
| (இ) | வெகுமதி நிதியத்தின் உப நிதியமான போதைப்பொருள் சுற்றிவளைப்பிற்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர் களுக்காக கொடுப்பனவு செய்வற்காக போதைப் பொருள் நிவாரண நிதியம் (நாகொட்டிக் நிதியம்) ஆண்டில் ரூபா 22,847,367 அதிகரிப்பு காண்பிக்கப்பட்ட போதும் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை ரூபா 7,910,000 மாத்திரமாகும். | அவதானிப்புடன் இணங்குகின்றோம். திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த உப நிதியத்திற்குரிய நிதி மாற்றப்பட்டுள்ளதுடன் திணைக்கள சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்காக உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 வரையான 05 வருட காலத்தில் ஆகக்கூடிய வெகுமதியினை பெற்ற நான்கு உத்தியோகத்தர் களுக்கிடையே ரூபா 3,924,053,810 வெகுமதியான பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட வெகுமதி பணத்தின் சராசரி ரூபா 39 மில்லியன் அளவாகும். மேலும் இந்தக் காலத்தில் ஒருவருக்கு ரூபா 60 மில்லியனை விட மேலதிகமாக வெகுமதி செலுத்தப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விபரம் பின்வருமாறு. | புலனாய்வு கோவைகள் தொடர்பான நடவடிக்கைகளை செய்கின்ற சுங்க பணிப்பாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய புலனாய்வுகளில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்காகவே வெகுமதி கோவைகளில் பணம் செலுத்தப்படுகின்றது. அதனால் ஆகக்கூடிய வெகுமதி நிதியைப் பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் உரிய விபரங்கள் உரிய புலனாய்வு மேற்கொள்ளப்பட்ட பிரிவுகளில் இருந்து பதிலை பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமானதாகும். | - மேற்படி - |

| பகிர்ந்தளிக் கப்பட்டுள்ள பணம்<br><br>ரூபா. மில்லியன் | பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 02-10 | 162 |
| 11-19 | 65 |
| 20-29 | 33 |
| 30-39 | 13 |
| 40-49 | 03 |
| 50-59 | 03 |
| 60 இற்கு மேல் | 05 |
| மொத்தம் | 284 |